# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 03/2009**

Prosecution witness : **55**

| | | | |
|---|---|---|---|
| Name: | டாக்டர்.கீதா | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A1, A8, A11, A12, A13, A14, A15, A17, A18, A19 present. A6 already died. Others absent. Petition U/s 317 crpc filed and allowed.

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of

**03.05.2023**

**முதல் விசாரணை**:

நான் தற்போது தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் மூத்த மருத்துவராக பணிபுரிகிறேன். கடந்த 14.08.2007 ம் தேதி மதியம் 3.30 மணிக்கு தென்காசி காவல் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் அசன் கனி என்பவரது பிரேதம் தலைமைக்காவலர் நடராஜன் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது. சடலம் இயல்பான விரைப்பு தன்மையுடன் காணப்பட்டது. 4.50 மணிக்கு சடலக்கூறாய்வு செய்யப்பட்டபோது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது. 1) தலையின் வலதுபாகத்தில் காதுக்கு மேல் 20X 6 செமீ அளவில் எலும்பு முறிவுடன் டெம்போரல் பகுதியில் எலும்பு வெளியில் தெரியும் அளவு நீளமான ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. 2) முதலாவது காயத்திற்கு கீழ் முன் தலைப்பகுதியில் எலும்பு வெளியில் தெரியும் வகையில் 15X6 செமீ நீளமான

வெட்டுக்காயம் காணப்பட்டது. 3) வலதுகாதுப்பகுதியிலிருந்து கன்னம் வரை கிடைமட்டமாக காதுபகுதியில் 5 செமீ அளவிலும் கன்னப்பகுதியில் 5X3X2 செமீ அளவிலும் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. 4) வலது மூக்குப்பகுதியில் இருந்து வலது கன்னம் வரை 8X5 செமீ அளவில் ஒரு வெட்டுக்காயமும்,Zygomatic எலும்பு முறிவுடன் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. 5) வலது தாடைபகுதியில் இருந்து வலது உதடு வரையிலும் கழுத்துவரையிலும் , கழுத்து அமைப்பு வெளியில் தெரியும் வகையில் 20X6 செமீ அளவிலான ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. 6) தாடையில் இருந்து இடது கன்னம் வரை 15X 4 செமீ அளவில் எலும்பு காயம் மற்றும் வெட்டுக்காயம் காணப்பட்டது.7) மூச்சுக்குழல் பகுதி வெளியில் தெரியும் வகையில் கழுத்து பகுதியில் 10X 6 செமீ அளவிலான ஒரு வெட்டுக்காயம் காற்றுப்புகும் பகுதி வெளியில் திறந்த நிலையில் காணப்பட்டது. 8) மேலும் 4X3X2 செமீ அளவிலான ஒரு வெட்டுக்காயம் நெஞ்சின் நடுப்பகுதியில் காணப்பட்டது. 9) மேலும் இடது மார்பு பகுதியில் இருந்து தோள் பட்டை பகுதிவரை 4X4X2 செமீ வரையிலான ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. 10) வலது தோள்பட்டைக்கு கீழே வலது கையின் பின்புறம் உள்ள பகுதி எலும்பு முறிவுடன் கூடிய வெட்டுக்காயம் காணப்பட்டது.11) வலது முன் கையில் பக்கவாட்டுப்பகுதியில் இரண்டு எலும்புகள் முறிந்த நிலையில் ஒரு வெட்டுக்காயம் எலும்பு வெளியில் தெரியும் வகையில் காணப்பட்டது. 12) இடது காலில் முழங்கால் டிபியா எலும்பு வெளியில் தெரியும் அளவில் எலும்பு முறிவுடன் கூடிய ஒரு வெட்டுக்காயம் 15 செமீ அளவில் காணப்பட்டது. 13) வலது முழங்காலில் Patella என்ற எலும்பு முறிவுடன் 6X6 செமீ அளவில் ஒரு காயம் காணப்பட்டது. 14) வலதுகாலில்கீழ்பாகத்தில் இரண்டு எலும்புக்கள் வெளியில் தெரியும் வகையில் 16X6 செமீ அளவிலான

ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. 15)வலது அடிவயிற்றில் 2X2X2 செமீ அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. 16) வலது தோள்பட்டையின் பின் பகுதியில் 10X6 செமீ அளவுடனும் ஒரு வெட்டுக்காயம் இணைப்புகள் வெளியில் தெரியும் வகையில்காணப்பட்டது. 17)உள்உறுப்புக்களை சோதனை செய்தபோது தலையின் வலது டெம்போரல் பகுதியில் எலும்பு முறிவுடன் கூடிய இரத்தஉறைவு காணப்பட்டது. 18) இருதய அறையில் 50 மிலி அளவிலான இரத்தம் இருந்தது. உள்ளுறுப்புக்களில் குறிப்பிடத்தக்க அசாதாரணமான காயங்கள் இருந்தது. இறந்தவர் மூச்சுக்குழல் பகுதியில் ஏற்பட்ட வெட்டுக்காயம் காணப்பட்டு பல்வேறு எலும்பு முறிவுடன் கூடிய காயங்களினாலும், அதிர்ச்சி மற்றும் இரத்தப்போக்கு காரணமாகவும் பிரேத பரிசோதனைக்கு 12 நேரம் முன்பாக இறந்திருக்க கூடும் என்று நான் கருத்து வழங்கினேன். மேற்கண்ட காயங்கள் 14.08.2007 அன்று காலை.10.15 மணிஅளவில அரிவாள் கத்தி போன்ற காயங்களால் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்பது குறித்தும் காவல் துறையினர் கேட்டதற்கு கருத்துரை வழங்கினேன். இன்று என்னிடம் காட்டப்படும் ஆயுதங்காளல் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் அதற்கும் வாய்ப்புள்ளது. நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ. 14 ஆகும்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**